1987 ஏப்ரல் 20]

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, ஏற்கனவே உள்ள விடுதியை ஒட்டி இடம் இருப்பதன் காரணமாக, அந்த இடத்தில் புதிய விடுதியைக் கட்ட, அதை மறுபரிசீலனை செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் போதுமான அளவிற்கு இருக்கிறதா என்பதும் ஏற்கனவே அங்கே 20 அறைகள் இருக்கின்றபொழுது அங்கே வருகின்றவர்கள் பயன்படுத்துகின்ற அளவுக்கு வாகனங்கள் மற்றவை எல்லாம் விட்டுவைக்கப் போதுமான அளவிற்கு இடம் தேவை என்பதும் கவனிக்கப்பட்டு, இந்த இடங்கள் எல்லாம் போக மீதி இடம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி இடம் இருக்குமானால், அதற்கான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வசதி இருக்குமானால் மற்றவை பற்றி ஆராயலாம்.

குத்தகைதாரர்கள் பதிவு திருத்தச் சட்டத்தின் கீழ் குழுக்கள் அமைத்தல்.

401—(* வினா எண் 10118) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தகைதாரர் பதிவுத் திருத்தச் சட்டத்தின் கீழ் எத்தனை வட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அமைக்கப்படாத வட்டங்களில் அமைக்கும் உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) அமைக்கப்பட்ட குழுக்கள் செயல்படுகின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், மதுரை, அண்ணா மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 57 வட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) ஆம்.

டாக்டர் கெ. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர் பதிவுத் திருத்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுக்கள் மூலமாக இதுவரையிலும் எத்தனை மனுக்கள் பெறப்பட்டுள்ளன, பதிவு செய்யப்பட்டுள்ளன? அதனால் ஏற்பட்ட நன்மைகள் என்ன என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் 57 வட்டங்களில் கீழ்க்கண்டவாறு ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 16 வட்டங்கள், திருச்சி மாவட்டத்தில் 10 வட்டங்கள், மதுரை மாவட்டத்தில் 6 வட்டங்கள், அண்ணா மாவட்டத்தில் 3 வட்டங்கள், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் 8 வட்டங்கள், சிதம்பரனார் மாவட்டத்தில் 6 வட்டங்கள், தர்மபுரி மாவட்டத்தில் 8 வட்டங்கள், ஆக 57 வட்டங்களில் செயல்படுகின்றன. மேற்படி திட்டத்தின் படி 31—12—1986 வரை 4,39,596 பேர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் பதிவு செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு 6,36,709 ஏக்கர்கள் ஆகும். பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களின் வகுப்புவாரி விவரம் வருமாறு: தாழ்த்தப்பட்டோர் 1,27,750, மலை சாதியினர் 717, பிற்பட்டோர் 1,58,080, மற்றவர்கள் 1,53,049, ஆக மொத்தம் 4,39,596 பேர்கள் ஆவார்கள். ஆகவே இதன் மூலமாக நில உடைமையாளர், இடையாள், நிலத்தைப் பயிரிடும் குத்தகை தாரர் ஆகியோரது பெயர்கள், முகவரிகள் ஆகியவற்றுடன் வட்டத்தில் அமைந்துள்ள நிலங்கள் தொடர்பான தகவல்களையும் விவரங்களையும் சேகரிக்கமுடிகிறது. அவ்வாறு சேகரிக்கப் பட்ட விவரங்களையும் தகவல்களையும் சம்பந்தப்பட்ட நிலத்திற்கு அதிகார வரம்புள்ள ஆணை அதிகாரிக்கு குத்தகை பதிவு சம்பந்தமான தகவல்களை மேற்படி சட்டத்தின்கீழ் செவ்வனே பரிந்துரை செய்யமுடிகிறது. மூலச்சட்டத்தின் பிரிவுகள், 3, 4, 5 -இல் குறிப்பிட்டுள்ளபடி பதிவு ஆவணங்களைத் தயாரித்தல், குறிப்பிட்ட நிலங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட குத்தகை ஆவணங்களைச் சேர்த்தல் மற்றும் ஒப்பளிக்கப்பட்ட குத்தகை ஆவணங்களில் உள்ள பதிவுகளில் மாற்றம் செய்தல் ஆகியவற்றில் பதிவு அதிகாரிக்கு உதவிகரமாக அமைந்து இருக்கிறது.

1987 ஏப்ரல் 20]

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கும்படியான கணக்கின்படி பார்த்தால் குத்தகைதாரர்களில் ஒரு பாதியளவு கூட இன்னும் பதிவு செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்பதுதான் யதார்த்த நிலையாக இருக்கிறது. நாங்கள் கிராமங்களிலே பல இடங்களிலே போகிறபோது குத்தகைதாரர்களிடமிருந்து இன்னும் பதிவு செய்யப்படாத நிலை இருக்கிறது என்ற பிரச்சினை எழுந்திருக்கிறது. ஆகவே மேலும் தொடர்ந்து எல்லாக் குத்தகைதாரர்களையும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா? அதற்கு வேண்டிய உத்திரவுகளை அனுப்புவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படாத மாவட்டங்களிலும், வட்டங்களிலும் குழு அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சில மாவட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து உறுப்பினர்கள் பெயர்கள் பெறப்பட்டுள்ளது. இன்னும் மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்து அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அந்த அறிக்கைகள் பெறப்பட்டவுடன் அந்தக் குழுக்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். அமைக்கப்பட்ட வட்டங்களில் குழு செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் மாவட்டங்களில் ஒவ்வொரு வட்டத்திலும் குழுக் கூட்டம் சிறப்பாக நடைபெற ஆலோசனைகளை கூறி வருகிறார்கள். விவரங்கள் கிடைத்ததற்குப் பிறகு மீதியுள்ள மாவட்டங்களிலும், வட்டங்களிலும் அந்தக் குழுக்களை அமைத்து எல்லா குத்தகைதாரர்களையும் பதிவு செய்வதற்கான முயற்சிகள் விரைவிலே மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குத்தகைதாரர் பதிவுச் சட்டத்தில் கொஞ்சம்கூட குறைந்தபட்சப் பாதுகாப்பு கூட நிலச்சொந்தக்காரர்களுக்கு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. நிலச்சொந்தக்காரர் ஒரு காலகட்டத்திலே குத்தகைக்கு விட்டுவிட்டு

தாங்களே சொந்தச் சாகுபடி செய்யவேண்டுமென்று விரும்பினாலும்கூட அந்த நிலத்தைச் சொந்தச் சாகுபடிக்காகத் திரும்பப் பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஒரு குடும்பத்திலே தலைவன் இறந்துவிட்டால் விவசாயம் செய்யமுடியாது என்பதால் அந்தக் குடும்பத்திலே இருக்கிற விதவை தன்னுடைய நிலத்தை குத்தகைக்கு விட்டுவிட்டு அந்தப் பையன் மேஜராகிற போது தன் தகப்பனார் வைத்திருந்த நிலத்தை சாகுபடி செய்ய வேண்டுமென்றாலும்கூட சொந்தச் சாகுபடிக்கு நிலத்தைத் திரும்பப் பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அதே போல் அரசாங்க ஊழியர் அரசாங்கப் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அங்கே போய் சொந்த நிலத்தைச் சாகுபடி செய்ய வேண்டுமென்கிறபோது அந்த நிலத்தைத் திரும்பப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதை நீக்குகிற வகையில் நிலத்தினுடைய சொந்தக்காரர்கள் சொந்தச் சாகுபடிக்கு வேண்டுமென்று கேட்கிறபோது அதிலே நியாயம் இருக்கும், உண்மை இருக்கும் என்கிற போது அதைக் கொடுப்பதற்கான வழிவகை செய்கிற வகையில் இந்தக் கட்டத்தில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உரிமையாளர், உடைமையாளர் விவசாயம் செய்கிறார்கள். அவர்களே விவசாயம் செய்யமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறபோது அவர்கள் குத்தகைக்கு விடுகிறார்கள். அப்படிக் குத்தகைக்கு விடப்படுகிற சூழ்நிலையின் அடிப்படையில் மீண்டும் தாங்களே விவசாயம் செய்யவேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது மீண்டும் நிலத்தை எடுத்துக் கொள்வதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா இல்லையா என்ற விவரம் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அடிப்படையில் பார்க்கிறபோது மீண்டும் தாங்களே எடுத்து தாங்களே சொந்த விவசாயம் செய்வதற்கு வழிவகை இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இல்லையென்றால் அவ்வாறு இருப்பதற்கு செய்ய முடியுமா என்பதை சட்டத் துறையைக் கலந்தாலோசித்து சட்டத்திற்குக் குந்தகம் ஏற்படாத வகையில் நியாயமான அளவுக்கு செய்ய முடியுமா என்பதை தனியாகத்தான் ஆராய வேண்டும்.